பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

08 05 2024 **WEDNESDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைக்கான ஐந்தாம் கட்டத்தேர்தலில் 695 வேட்பாளர்கள் களத்தில் உள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

2. தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்றபின்னர் கடன் சுமை வெகுவாக அதிகரித்துள்ளதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

3. குடிநீர் பற்றாக்குறையை களைய திமுக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

4. தமிழகத்தில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் நாளை மறுநாள் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

5. ஆசிய ஓபன் **Pickle Ball** சாம்பியன் போட்டியில் இந்தியா 3 தங்கம், 2 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

*---- இனி விரிவான செய்திகள் ----*

**<<<<<<>>>>>**

மக்களவைக்கான ஐந்தாவது கட்டத் தேர்தலில் 695 வேட்பாளர்கள் களத்தில் உள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

எட்டு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட 49 தொகுதிகளில் வரும் 20-ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

அதிகபட்சமாக மகாராஷ்ட்ராவில் 264 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

இதற்கிடையே, நான்காம் கட்டமாக வரும் 13-ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள தொகுதிகளில் அரசியல் கட்சிகளின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

மக்களவைக்கான தேர்தல் ஏழு கட்டங்களாக கடந்த மாதம் 19-ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் ஒன்றாம் தேதிவரை நடைபெறுகிறது.

வாக்கு எண்ணிக்கை ஜூன் மாதம் 4-ஆம் தேதி மேற்கொள்ளப்படும்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி மீண்டும் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனை தெரிவித்துள்ள அவர், மாநிலத்தில் திமுக அரசு பொறுப்பேற்றபின்னர் கடன் சுமை 3 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

முந்தைய அஇஅதிமுக ஆட்சிக்காலத்தில் செயல்படுத்தப்பட்டு வந்த திட்டங்களை திமுக அரசு நிறுத்தியுள்ளதாகவும் கூறியுள்ளார்.

போக்குவரத்துத்துறை ஊழியர்களுக்கு அளித்த வாக்குறுதிகளையும் திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாமல் இருப்பதை தடுக்க திமுக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பிஜேபி மகளிர் அணித்தலைவர் திருமதி வானதி சீனிவாசன் வலியுறுத்தியுள்ளார்.

இன்று கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், குடிநீர் பிரச்சினையை களைவதற்காக ஒதுக்கப்பட்ட நிதி போதுமானதாக இல்லை என்று குறிப்பிட்டார்.

மக்கள் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்படுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

தெரு நாய்களை கட்டுப்படுத்த தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் திருமதி வானதி சீனிவாசன் வலியுறுத்தினார்

<<<<<<>>>>>

ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு வழங்காமல், இடமாறுதல் கலந்தாய்வை நடத்தக்கூடாது என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு தமிழக அரசை வலியுறுத்தியுள்ளார்

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாநிலத்தில் ஆசிரியர்களுக்கான பணியிட மாறுதல் கலந்தாய்வு வரும் 24-ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 30-ஆம் தேதிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

மாநிலத்தில் இதுவரை பதவி உயர்வு வழங்கப்பட்ட பின்னர், அதனால் ஏற்படும் காலியிடங்களையும் கணக்கில் கொண்டுதான் கலந்தாய்வு நடத்தப்பட்டு வந்ததாக கூறியுள்ளார்.

திமுக அரசு ஆட்சிப்பொறுப்பேற்றபின்னர் இந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை என்றும் திரு ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

பத்திரப்பதிவுத்துறையின் சேவை கட்டண உயர்வை, தமிழக அரசு திரும்பப்பெற வேண்டும் என்று தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், எவ்வித முன்னறிவிப்பும் இன்றி சேவைக்கட்டணங்கள் உயர்த்தப்பட்டிருப்பது கண்டிக்கத்தக்கது என்று குறிப்பிட்டுள்ளார்.

மூன்றாண்டு ஆட்சிகாலத்தை நிறைவு செய்துள்ள திமுக அரசு, தேர்தலுக்கு முன் அளித்த வாக்குறுதிகளை இன்னும் நிறைவேற்றவில்லை என்றும் திருமதி பிரேமலதா விஜயகாந்த் குற்றம் சாட்டியுள்ளார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் நாளை மறுநாள் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் காலை ஒன்பதரை மணிக்கு **www.tnresults.nic.in, www.dge.tn.gov.in** மற்றும் **results.digilocker.gov.in** ஆகிய இணையதளங்களில் மாணவர்கள் தங்களது பதிவு எண் மற்றும் பிறந்த தேதியை பதிவு செய்து தேர்தல் முடிவுகளை அறிந்துகொள்ளலாம் என்றும் அரசு தேர்வுகள் இயக்ககம் கூறியுள்ளது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் இயங்கும் தேசிய தகவலியல் மையங்களிலும் மைய மற்றும் கிளை நூலகங்களிலும் கட்டணம் இன்றி தேர்வு முடிவுகளை அறிந்துகொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் கைபேசி எண்ணுக்கு குறுஞ்செய்தி வாயிலாகவும் தேர்வு முடிவு அனுப்பப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

கல்வி நிறுவனங்களில் வர்த்தக கண்காட்சிகளை நடத்த அனுமதிக்கக்கூடாது என்று கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பாக பதிலளிக்குமாறு சென்னை உயர்நீதிமன்றம், தமிழக அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

இவ்வழக்கினை விசாரணை செய்த நீதிபதிகள் திரு ஜெகதீஷ் சந்திரா, திருமதி கலைமதி அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

நான்கு வாரத்திற்குள் பதில் மனு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 53 செகண்ட்ஸ்)*

இதற்கிடையே, சேலம் மாவட்டம் ஏற்காட்டில் நான்கு மாதங்களுக்கு பிறகு கடும் பனிமூட்டம் நிலவியதாகவும், இதன் காரணமாக சுற்றுலாப்பயணிகள் மகிழ்ச்சியடைந்ததாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - விஜயகுமார் - 45 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

ரஷ்யாவில் உயர்கல்வி வாய்ப்புக்கான கண்காட்சி சென்னை, மதுரை, சேலம், திருச்சி, கோவை ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

இதுதொடர்பாக, இந்தியாவுக்கான ரஷ்ய தூதரகத்தின் சென்னை அலுவலகம் ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் சந்திப்பில் பேசிய வெளிநாட்டு கல்வி வாய்ப்புகளுக்கான ஆலோசகர் திரு ரவிச்சந்திரன், இந்த கண்காட்சி வரும் 11-ஆம் தேதி தொடங்கி, 17-ஆம் தேதிவரை நடைபெறும் என்றார்.

*(சவுண்ட் பைட் - ரவிச்சந்திரன் - 52 செகண்ட்ஸ்)*

**<<<<<<>>>>>**

*மாவட்டச் செய்திகள்*

நாமக்கல் மாவட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறைகள் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருவதாக ஆட்சியர் திருமதி உமா கூறியுள்ளார்.

--------------

நெல்லை மாவட்டத்தில் உள்ள தனியார் பள்ளி வாகனங்களில் ஆட்சியர் மற்றும் போக்குவரத்துத்துறை அதிகாரிகள் இன்று ஆய்வு மேற்கொண்டனர்.

--------

செங்கல்பட்டு மாவட்டம் தென்மேல்பாக்கம் பகுதியில் ஆவடியில் பறிமுதல் செய்யப்பட்ட 192 கிலோ போதைப்பொருட்களை காவல்துறையினர் அழித்தனர்.

--------------

சேலம் அருகே டிராக்டர், கார் மற்றும் பார்சல் லாரி அடுத்தடுத்து மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார்.

-------

கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரத்தில் உள்ள அருள்மிகு தாணுமாலயசுவாமி திருக்கோவிலில் சித்திரை தெப்பத்திருவிழாவிற்கான கொடியேற்றம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

**<<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய ஓபன் **Pickle Ball** சாம்பியன் போட்டியில் இந்தியா 3 தங்கம், 2 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

வியட்நாமில் நடைபெற்ற இப்போட்டியின், கலப்பு இரட்டையர் பிரிவில், **Sachin Pahwa – Priyanka Chhabra** இணையும், மகளிர் இரட்டையர் பிரிவில் **Isha Lakhani – Pei Chuan Kao** இணையும் தங்கப்பதக்கம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவிலும் இந்தியாவிற்கு தங்கப்பதக்கம் கிடைத்தது.

--------------------

துபாயில் நடைபெற்றுவரும் சர்வதேச செஸ் போட்டியின் நான்காவது சுற்று முடிவில், இந்தியாவின் அரவிந்த் சிதம்பரம் நான்கு புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

--------------------

டென்மார்க் சேலஞ்சர் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதலாவது தகுதி சுற்று ஆட்டத்தில், இந்தியாவின் **Bharat Raghav, Tarun Reddy Katam** மற்றும் **Abhishek** வெற்றிபெற்றனர்.

**<<<<<<END>>>>>**